**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன் – திரு. ஆர். ராஜாராமன், மாற்றுத் திறனாளி மாணவர் – பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றது – உயர்கல்வி தொடருதல் முதலமைச்சரின் பொது நிவாரண நிதி – ரூ.3.00 இலட்சம் – நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை ( நிலை) எண் 12**

**நாள் 02.03.2016**
**மன்மத–மாசி 19,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2047**
**படிக்கப்பட்டது:**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க எண் 4111/மாதிந–2.1/2015, நாள் 09.07.2015.

------

**<u>ஆணை</u>:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் மாநில மற்றும் மாவட்ட அளவில் முதல் மூன்று நிலைகளைப் பெறும் பார்வையற்ற, காதுகேளாத மற்றும் வாய்பேச இயலாத மாற்றுத் திறனாளி மாணவ மாணவியருக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மேற்படி ஊக்கத் தொகை வழங்கப்படுவதில்லை என்பதை குறிப்பிட்டு, சென்னை, பெரம்பூரில் வசித்து வரும் திரு ஆர். ராஜாராமன் என்பார் எந்த நேரத்திலும் எலும்பு முறிவு ஏற்படக்கூடிய நிலையில், பிறவியிலேயே மரபணு பாதிப்புக்குள்ளான (Osteogenetic Bone Disorder) நபர் ஆவார் எனவும், மேற்கண்ட நோய் பாதிப்புக்குள்ளான நபராக இருந்தும், 2013 ஆம் ஆண்டில் நடைபெற்ற 10 வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 500 மதிப்பெண்களுக்கு 481 மற்றும் 2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 1200 மதிப்பெண்களுக்கு 1128 மதிப்பெண்களும் பெற்று சாதனை புரிந்துள்ளதாகவும், அன்னார் கொளத்தூர் KPJ குருகுலம் மெட்ரிக் உயர்நிலைப் பள்ளியில் ஆங்கில வழி பயின்று மேற்கண்ட மதிப்பெண்களை பெற்றுள்ளார் எனவும், மேற்படி நபர் தற்போது சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள Charted Accountant நிறுவனத்தில், C.A. பயின்று வருவதாகவும், அன்னார் தனது வறிய பொருளாதார நிலைமையிலிருந்தும், கல்விச் செலவு மற்றும் போக்குவரத்து செலவினங்களை கையாள்வதில் மிகுந்த சிரமங்களை சந்தித்து வருவதாகவும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3.00 இலட்சம் ஊக்கத் தொகை வழங்கினால், திறமைமிக்க பட்டயக் கணக்கராக வளர்ந்திட இயலும் என கோரியுள்ளதாகவும் தெரிவித்து, திரு. ஆர்.ராஜாராமன், மாற்றுத் திறனாளி மாணவர் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்களை கருத்திற்கொண்டும், பொருளாதார நிலையினை கண்ணுற்றும் அவரை ஊக்குவிக்கும் வகையில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3.00 இலட்சம் ஊக்கத் தொகை வழங்கிடலாம் எனவும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

[த.பி.பா]

2. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, தனியர் திரு ஆர். ராஜாராமன் (மாற்றுத் திறனாளி) என்பவர் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்களை கருத்திற்கொண்டும் மற்றும் வறிய பொருளாதார நிலையினை கருத்திற்கொண்டு, அன்னார் பட்டயக் கணக்கர் (Charted Accountant) படிப்பு பயில உதவி செய்யும் வகையிலும், இந்நேர்வினை சிறப்பினமாகக் கருதி, மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து (Chief Minister's Public Relief Fund) ரூ.3.00 இலட்சம் ஊக்கத் தொகையாக நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) காசோலையை, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு வழங்குமாறு அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், நிதி (மு.பொ.நி.நி)துறை, சென்னை–9 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. மேற்படி நிவாரணத் தொகையை காசோலையாகவோ அல்லது அஞ்சலக சேமிப்புக் கணக்கு மூலமாகவோ உரிய நடைமுறை விதிகளின்படி, திரு. இராஜாராமன், பாதுகாவலர் பெயர் திரு. ஹரிஹரன், பெரம்பூர், பெரியார் நகர், சென்னை அவர்களின் குடும்பத்திற்கு வழங்கி, குடும்பத்தாரிடம் வரிவில்லையிட்ட பற்றுச் சீட்டை பெற்று, அதில் வட்டாட்சியர் பதவிக்கு குறையாத அலுவலரின் சான்றொப்பதுடன், உரிய அலுவலக முத்திரையுடனும், அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், நிதி(மு.பொ.நி.நி) துறை, சென்னை–9 அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறும், அதன் நகலினை அரசின் மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கு அனுப்பி வைக்குமாறும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா எண் 15997/CMPRF/2016, நாள் 02.03.2016–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், நிதி(மு.அ.பொ.நி.நி)த் துறை,
சென்னை–9 (3 நகல்கள்) (தனிநபர் மூலமாக)
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
தனி அலுவலர், முதலமைச்சரின் தனிப் பிரிவு, சென்னை–9.
திரு. ஆர். இராஜாராமன், பா/பெ, திரு. ஹரிஹரன், பெரம்பூர்,
பெரியார் நகர், சென்னை.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

**நகல்:**

நிதி (ச.ந./மு.அ.பொ.நிதி)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்